### அண்ணா பல்கலைக்கழகம் உள்ளிட்ட 11 அரசு பல்கலைக் கழகங்களில்

# “நான் முதல்வன்” திட்ட பல்கலைக் கழக செயல்பாட்டு மையங்கள்!

## காணொலி மூலம் – துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் திறந்து வைத்தார்!



**சென்னை, மார்ச் 5 – தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் சார்பில் 23 மாவட்டங்களில் திறனகங்களையும் அண்ணா பல்கலைக்கழகம் உள்ளிட்ட 11 அரசு பல்கலைக் கழகங்களில் நான் முதல்வன் திட்ட பல்கலைக்கழக செயல்பாட்டு மையங்களையும் காணொலி காட்சி மூலம் திறந்து வைத்தார்.**

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (3.3.2026) சென்னை குறிஞ்சி முகாம் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் மற்றும் தமிழ்நாடு மகளிர் வேலைவாய்ப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட இருக்கும் நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பதற்காக 23 மாவட்டங்களில் திறனகங்களை காணொலி காட்சி மூலம் தொடங்கி வைத்தார். மேலும், இந்நிகழ்ச்சியில் அண்ணா பல்கலைக் கழகம் உள்ளிட்ட 11 அரசு பல்கலைக் கழகங்களில் நான் முதல்வன் திட்ட பல்கலைக் கழக செயல்பாட்டு மையங்களையும் காணொலி காட்சி மூலம் திறந்து வைத்தார்.

தொடர்ந்து, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் (TNSDC) மற்றும் மாநில திட்டக்குழு இடையே United Nations Development Programme (UNDP) தொழில்நுட்ப ஆதரவுடன், நிறுவன அமைப்புகளை வலுப்படுத்துதல், நிலையான செயற்பாட்டு நடைமுறைகள் (SOPs) உருவாக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த தொழில் வழிகாட்டுதல் குறித்து புரிந்துணர்வு ஒப்பந்தம் பரிமாறிக் கொள்ளப்பட்டது.

மேலும், தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் (TNSDC) மற்றும் IIT Madras இடையே மாவட்ட திறன் அலுவலர்கள் மற்றும் திட்ட நிர்வாகிகளுக்கான பயிற்றுநர் பயிற்சி (ToT) மற்றும் தொழில் வழிகாட்டல் பயிற்சி திட்டத்தை செயல்படுத்த புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் பரிமாறிக் கொள்ளப்பட்டது.

துணை முதலமைச்சர் அவர்கள் 2024-2025-ஆம் ஆண்டு மானியக் கோரிக்கை அறிவிப்பில் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் மற்றும் தமிழ்நாடு மகளிர் வேலைவாய்ப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட இருக்கும் நடவடிக்கைகளை ஒருங்கிணைக்க அனைத்து மாவட்டங்களிலும் ஒரு மாவட்ட திறன் மையம் உருவாக்கப்படும் என்று அறிவித்தார்.

இவ்வறிவிப்பினைச் செயல்படுத்தும் வகையில் 38 மாவட்டங்களிலும் மொத்தம் 5.96 கோடி ரூபாய் மதிப்பீட்டில் “திறனகம்” எனும் சிறப்பு மாவட்ட திறன் மையங்களை நிறுவியுள்ளது.

ஒவ்வொரு திறனகமும் கணினி வசதி, குளிர்சாதன வசதி, உபகரணங்கள் மற்றும் பிற அடிப்படை கட்டமைப்பு வசதிகளுடன் ஒரே இடத்தில் தொழில் வழிகாட்டல், திறன் மேம்பாட்டு ஆலோசனை, பயிற்சி இணைப்புகள் மற்றும் வேலை வாய்ப்பு வாய்ப்புகளுக்கான அணுகல் ஆகியவற்றை வழங்கும் ஒருங்கிணைந்த சேவை மையமாக செயல்படும். இம்மையங்கள் மாவட்ட ஆட்சித் தலைவரின் வழிகாட்டலில் மாவட்ட திறன் அலுவலர்களால் தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகத்தின் (TNSDC) ஆதரவுடன் நிர்வகிக்கப்பட வுள்ளன.

‘நான் முதல்வன்’ திட்டம், பொறியியல், கலை மற்றும் அறிவியல், பாலிடெக்னிக் மற்றும் ITI மாணவர்களுக்கு எவ்வித நிதிச்சுமையும் இன்றி கல்வியாளர்கள், தொழில்நுட்ப நிபுணர்கள், வழிகாட்டிகள் மற்றும் நிர்வாகிகள் மூலம் திறன்களை வளர்க்கும் வகையில் ஒருங்கிணைந்த திறன் பயிற்சி வகுப்புகளை வழங்கி வருகிறது.

துணை முதலமைச்சர் அவர்கள் 2025--2026 ஆண்டு அறிவிப்பில் தமிழ்நாடு முழுவதும் உள்ள 10 மாநில கலை மற்றும் அறிவியல் மற்றும் ஒரு தொழில்நுட்ப பல்கலைக் கழகத்தில் நான் முதல்வன் திட்டத்திற்காக பல்கலைக்கழக “செயல்பாட்டு மையங்கள்” 1.10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிறுவப்படும் என்று அறிவித்தார்.

இந்த ‘நான் முதல்வன்’ பல்கலைக் கழக செயல்பாட்டு மையங்கள் நான் முதல்வன் திட்டங்களைச் சிறப்பாகச் செயல்படுத்தவும், கண்காணிக்கவும் மற்றும் ஒருங்கிணைக்கவும் (NMU OC) ஒரு Nodal Centre ஆக செயல்படும். தொழில் துறைக்குத் தேவையான திறன் மேம்பாட்டுப் பாடப்பிரிவுகளைப் பல்கலைக்கழகப் பாடத்திட்டங்களோடு இந்த மையங்கள் ஒருங்கிணைக்கும். மாணவர்களுக்கு Internship, மற்றும் வேலை வாய்ப்புகளை வழங்க இந்த மையங்கள் உதவும். மாணவர் சேர்க்கை, திறன் சான்றிதழ் பெறுதல் மற்றும் வேலைவாய்ப்பு புள்ளி விவரங்களைக் கண்காணிக்க இந்த மையங்கள் உதவும்.

இந்நிகழ்ச்சியில் சிறப்பு திட்ட செயலாக்கத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், திட்டம் மற்றும் வளர்ச்சி துறைச் செயலாளர் சஜ்ஜன் சிங் ரா சவான், தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழக மேலாண்மை இயக்குநர் கிராந்தி குமார் பாடி, மாநில திட்டக்குழு உறுப்பினர் செயலாளர் (மு.கூ.பொ) திருமதி எஸ்.சுதா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




### சென்னை கிழக்கு மாவட்டத்தில் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலையில் மனிதநேய விழா!

# ‘தமிழ்நாட்டு விடியலுக்கான திராவிட விதை - முதல்வர் மு.க.ஸ்டாலின்!’

## கருணாஸ் பாடிய கவிதை!



சென்னை, மார்ச் 5 -

சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில் எழும்பூர் வடக்கு பகுதியில் “மனிதநேயம் - 28” பண்பாட்டு கலையை பறைசாற்றுவோம்! பயன்பாட்டு வழியை நிலைநாட்டுவோம்! எனும் தலைப்பில் 03.3.2026, செவ்வாய்க்கிழமை, மாலை: 6.00 மணி அளவில் சென்னை புரசைவாக்கம்தானா தெருவில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளர் பி.கே.சேகர்பாபு முன்னிலையில் எழும்பூர் வடக்கு பகுதி கழகச் செயலாளர் சொ. வேலு, எம்.சி தலைமையில் கலைமாமணி ட்ரம்ஸ் சிவமணி அவர்களும் மற்றும் வி.எம்.மகாலிங்கம் மதிச்சியம் பாலா, இசைவாணி ஆகிய பாடகர்கள் பங்கேற்ற மகேஷ் இன் ஷாமலா இசைக்குழுவினரின் மாபெரும் இசையரங்கத்தை திரைக்கலைஞரும் முக்குலத்தோர் புலிப்படை தலைவருமான கருணாஸ் துவக்கி வைத்து உரையாற்றி மக்கள் முதல்வரான தமிழ்நாட்டு முதல்வரைப் பாராட்டி கவிதை பாடினார்.

இவ்விழாவில் வி.சுதாகர், கே.எஸ்.ரவிச்சந்திரன், தமிழன் பிரசன்னா, கே.எஸ்.எம் நாதன் புனிதவதி எத்திராஜ் எம்.சி, எஸ். மணிமுடி, ராஜேஸ்வரி ஸ்ரீதர் எம்.சி, கோ மணி, அ.நிர்மலா தேவி, ஜி தாமோதரன், நந்தீஸ்வரன், க. வினோத் மற்றும் கழக நிர்வாகிகள் முன்னாடிகள் செயல் வீரர்கள் பொதுமக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

கருணாஸ் அவர்களின் கவிதை வருமாறு:-

**காலம் முழுக்க<br>காலையில் எழும்<br>சூரியனைப் போல் இனி<br>வாழும் காலமெல்லாம்<br>ஆட்சியில் அமரப்போகும்..<br>எங்களின் ஓய்வறியா<br>உதயசூரியன்<br>அண்ணன் ஸ்டாலின்<br>அவர்களுக்கு..**

**இனிய பிறந்த நாள்<br>வாழ்த்துகள்!**

**அறிஞர் அண்ணா<br>திராவிட வயலை<br>உழுது<br>பண்படுத்தினார்!**

**முத்தமிழ் அறிஞர்<br>கலைஞர் அந்த<br>திராவிட வயலில் நல்ல<br>விதையை விதைத்தார்!**

**அந்த<br>நல்ல விதைதான்<br>இன்று நாடாளும்<br>அண்ணன்<br>ஸ்டாலின்!!**

**திராவிட விதை<br>ஒருபோதும் பதர்கள்<br>ஆவதில்லை! அது<br>நூற்றாண்டு கடந்தும்<br>விளையும்<br>வீரியமிக்க விதை!**

**இனியும்<br>தமிழ்நாட்டு<br>விடியலுக்காக<br>திராவிட விதை<br>விளையும்!!**

**திராவிட வயலுக்குள்<br>ரசாயன மருந்துகளை<br>எப்படியாவது<br>அடித்துவிடலாம்<br>என்றுதான்<br>ஆர்ப்பரிக்கிறது<br>ஆரியம் என்கிற<br>ஆர்.எஸ்.எஸ்.<br>சங்பரிவார பாஜக.!**

**ஆனால்..<br>தன்<br>கூரியமுனை<br>சூரியக் கதிரால்<br>குத்திக் கிழித்துவிடும்<br>திராவிடம்<br>என்பதை<br>மறந்துவிடாதீர்<br>மோடியாரே!**

**உங்கள்<br>மோடிமஸ்தான்<br>வேலையெல்லாம் எடப்<br>பாடியிடம்தான்<br>காட்டலாம்!<br>திராவிட ஸ்டாலினிடம்<br>காட்ட இயலாது<br>மாட்டிக் கொள்வீர்!**

**நாங்கள்<br>திராவிட மாடல்<br>திருவாரூர் தேரு!<br>இதில்<br>பா.ஜ.க.வாக இருந்தாலும்<br>பாகற்காயாக இருந்தாலும்<br>தேர்க்காலில் சிக்கினால்<br>உருத்தெரியாது<br>நசுங்கிவிடும்<br>மறந்து விடாதீர்!!**

**திராவிடமாடல் என்பது<br>சமூக நீதிமாடல்! அது<br>மக்களின் தேடல்<br>தேடலை அறிந்து<br>தேவையை<br>கொடுப்பதுதான்<br>திராவிட மாடல்!!**

**ஏட்டிக்குப்<br>போட்டி எடப்பாடி<br>நாக்குத்திடலில்<br>நடனமாடி...<br>அரியணை அரிப்புக்கு<br>அறிவிக்கிறார்<br>இன்ஸ்டால்மெண்டிலே<br>திட்டங்களை...<br>இனி..திட்டங்கள் மட்டுமா!<br>உங்கள் கொட்டமும்<br>அடங்கும் காலம் மீது!**

**நாக்கை நாப்பது<br>கிலோ மீட்டர்<br>நீட்டினாலும்<br>வாக்கை<br>வாங்க முடியாது!!**

**நாளை உங்கள்<br>நாணயமற்ற நாக்கையும்<br>சுளுக்கெடுப்பர் மக்கள்!!<br>ஐந்தாண்டு காலம்<br>தொடக்கம் முதல்<br>இன்று வரை<br>வாரி வழங்கும்<br>திராவிட வள்ளலாய்<br>வளர்ந்து நிற்கிறார்<br>அண்ணன் ஸ்டாலின்!**

**தமிழ்நாட்டின்<br>வளர்ச்சிப் பயணத்தில்<br>மகிழ்ச்சியூட்டும்<br>திட்டங்களை<br>அன்றாடம் அறிவிக்கிறார்<br>அண்ணன் ஸ்டாலின்!**

**திமுக<br>அழியா வரலாற்றை<br>அடைந்துவிட்டது! இனி<br>அது உதயநிதி கடந்தும்<br>உயரும்!!**

**ஒருவரையும்<br>பின்தங்க விட மாட்டோம்!<br>வெல்வோம் ஒன்றாக இது<br>நம்பிக்கை ஒளிவீசும்<br>முழக்கம்!!**

**எதிரிகளுக்குத்தான்<br>அன்றாடம் கலக்கம்!**

**தமிழ்நாடு முதல்வர்<br>அன்று அறிவித்தார்<br>ஐயாயிரம்<br>இன்று அறிவித்தார்!<br>ரெண்டாயிரம்<br>நாளையும்<br>அறிவிப்பார்!<br>முதியோர்,<br>மாற்றுத்திறனாளிகள்,<br>கைம்பெண்கள்,<br>திருநங்கையார்<br>மீனவர்கள்,<br>தேயிலைத்<br>தொழிலாளர்கள்<br>இவர்களின்<br>உதவித் தொகையுடன்<br>ரூபாய் இரண்டாயிரம்!!<br>வந்தடைந்துவிட்டது<br>வங்கியில்!<br>வாழ்க!! வாழ்க!! என<br>வாக்குச் செலுத்தி<br>வாழ்த்த இருக்கிறார்கள்!**

**விளிம்பு நிலை மக்களின்<br>இதயத்தில் நீங்கா<br>இடம் பிடித்துவிட்டார்<br>திராவிட முதல்வர்!**

**இப்போது<br>பா.ஜ.க. அதிமுக<br>மங்குணித்<br>தலைவர்களுக்கு<br>இந்தப்<br>பங்குனி வெயிலிலும்<br>குளிர்காய்ச்சல்<br>அடிக்கத்<br>தொடங்கிவிட்டது!**

**ஆம்!<br>அதிமுக கூடாரம்<br>காலியாகிவிட்டது!<br>வடை தூக்க<br>வாய் பிளந்த<br>பா.ஜ.க.<br>இப்போது<br>வாய்ப் பிழந்து நிற்கிறது!!<br>அதிமுக வெறும்<br>காலி பெருங்காய டப்பா!<br>அந்த டப்பா வண்டி<br>பழனிச்சாமி<br>பல்லிளித்து நிற்கிறார்!!<br>பரிதாபமாக நிற்கிறார்**

**மானமுள்ள<br>தலைவர்கள்<br>தாய்கழகத்திற்கு<br>வந்துவிட்டார்கள்!!**

**ஆனால்..<br>ஆளே இல்லாத<br>அதிமுக கடையில்<br>யாருக்கு டீ ஆத்துகிறார்<br>எடப்பாடி என்றுதான்<br>தெரியவில்லை!!**

**மோடியும்<br>அமித்ஷாவும்<br>அடிக்கடி இந்த<br>டீக்கடைக்கு வருகிறார்கள்<br>மொத்தமாக<br>கடையை<br>மூடப்போகிறார்கள்!**

**இனி<br>அனைத்திந்திய<br>அண்ணாதிராவிட<br>முன்னேற்றகழகம்**

**அனைத்திந்திய<br>பாரதீய ஜனதா<br>முன்னேற்றக் கழகமாக<br>முழுமையாக<br>மாறிவிடும்!!<br>முன்னாள்<br>முதலமைச்சர் எடப்பாடி<br>தேர்தல் முடிந்த<br>மறுநாளில்<br>வட்டச்செயலாளர்<br>வண்டுமுருகனாகி<br>விடுவார்!!**

**ஆமை புகுந்த வீடு<br>அழியும் என்பார்கள்<br>பா.ஜ.க புகுந்த கட்சி<br>என்னவாகி விடும்<br>என்பதை<br>எண்ணிப் பாருங்கள்!!**

**தயவு செய்து<br>நான் சொல்வதை<br>இனியாவது கேளுங்கள்..<br>அய்யா எடப்பாடியாரே**

**தாய்க்கழகம்<br>திமுகவுக்கே<br>வந்துவிடுங்கள்<br>தேர்தல் வேலையாவது<br>எளிதாகிவிடும்!**

**திமுக தலைவர்<br>உங்களை எந்த<br>பங்கமில்லாது<br>பாதுகாப்பார்!!<br>கவலையறிந்து<br>கஞ்சி ஊத்துவார்!!**

**நாளை<br>நாடும் நமதே<br>200 ம் நமதே!!**

**இன்னும்<br>ஒரிரு மாதங்களின்<br>மீண்டும்<br>முதல்வராய்<br>பிறக்கும் போகும்<br>அண்ணன்<br>மு.க.ஸ்டாலின்<br>அவர்களுக்கு**

**மீண்டும் எனது<br>பிறந்த நாள் வாழ்த்துகளை<br>தெரிவித்துக்<br>கொள்கிறேன்..**



முதலமைச்சர் தளபதியார் அவர்கள் ”உங்கள் தொகுதியில் முதலமைச்சர் திட்டம் ” திருக்கோவிலூர் சட்டமன்றத் தொகுதி, தேவியகரம் ஊராட்சியில் ரூபாய். 2.19 கோடியில் தேவியகரம் மற்றும் மூன்று வழியோர் குடியிருப்புகளில் உள்ள 3238 மக்கள் பயன்பெறும் குடிநீர் திட்டத்தை காணொளி மூலமாக துவக்கி வைத்தார். அதனைத் தொடர்ந்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கழக துணைப் பொதுச்செயலாளர், முன்னாள் அமைச்சர் முனைவர் க.பொன்முடி எம்.எல்.ஏ திறந்து வைத்தார். நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் பிரசாந்த், மாவட்ட துணைச் செயலாளர் டி.என்.முருகன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் டி.செல்வராஜ், ஒன்றிய செயலாளர்கள் மாவட்ட ஊராட்சி குழு துணை தலைவர் மு.தங்கம், கு.தீனதயாளன் மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.